# 08-04-2024 செய்தி

## எது மக்களின் அதிகாரத்தை உருவாக்குகிறது?

- அதிகாரம் செயல்படுகிற விதங்கள் இரண்டு என அம்பேத்கர் குறிப்பிடுவார். ஒன்று உள்கட்டுமானம், அடுத்தது வெளிக் கட்டுமானம் என அதை விளக்கினார்.
- சட்டங்கள் முதலியன வழியாகச் செலுத்தப்படும் அதிகாரம் வெளிக்கட்டுமானம், உள்கட்டுமானம் என்பது மக்களிடையே திரண்டிருக்கும் கருத்து, நிலவும் பழக்கம், தொடரும் வழக்கம், பின்பற்றப்படும் மரபு முதலியவற்றால் உருவாவது.
- இரண்டுக்கும் ஒத்திசைவு இல்லையெனில் எந்த அதிகாரத்தையும் செயல்படுத்த முடியாது.

**மக்களின் வலிமை:**

- கோரல் மில் வேலைநிறுத்தத்தின் போதும் விபின் சந்திர பால் விடுதலையை ஒட்டி வ.உ.சி. கொண்டாட விரும்பிய தேசிய நாள் கொண்டாட்டத்தின்போதும் ஆட்சியாளர்கள் அவரை விசாரணைக்கும் பேச்சுவார்த்தைக்கும் தொடர்ந்து அழைத்தனர்.
- ஆனால் அவர் மக்களிடம் சென்று பேசுவதில் காட்டிய முதன்மைக் கவனத்தை, அதிகார வர்க்கத்திடம் போய்ப் பேசுவதில் காட்டவில்லை.
- அதற்குக் காரணம் 'உள்கட்டுமான'த்துக்கு அவர் அளித்த முன்னுரிமை. மக்களிடம்தான் வலிமைமிக்க அதிகாரம் உள்ளது என்பதை 1908இலேயே வ.உ.சி. உணர்ந்திருந்தார்.
- "அதிகாரிகள் மூலமாகத் தங்கள் குறைகளைத் தெரிவித்து நிவர்த்தி செய்வதைக் காட்டிலும் பத்திரிகைகள் மூலமாகத் தங்கள் கோபத்தை வெளிக்காட்டுவதில் தான் சத்தியாகிரகிகள் கருத்துடையவராக இருக்கிறார்கள்".
- பிரச்சினையைச் சட்டசபையில் எடுத்துக்கூறித் தீர்வு கண்டிருக்க வேண்டும் ஒழிய அவசரப்பட்டு சத்தியாகிரகத்தை ஆரம்பித்தது தவறு என்று திருவாங்கூர் சமஸ்தான திவான் (பொறுப்பு) வீரராகவ ஐயங்காரும் சத்தியாகிரகிகளைக் குற்றஞ்சாட்டினார்.
- ஈழவர் தலைவர் டி.கே.மாதவளன் சட்டசபையில் பல முறை தீர்மானம் கொண்டுவந்து அவை தோல்விகளைத் தழுவின.
- பின்னரே மக்கள் கருத்தை உருவாக்கச் சத்தியாகிரகத்தை முன்னெடுத்தார். இதுவும் மககள் சக்தியே மகத்தானது என்பது உணரப்பட்டதன் அடையாளமாகும்.
- அதைப் போல வைக்கம் கோயில் தெருவில் ஒடுக்கப்பட்டவர்கள் நுழைய அனுமதிக்கலாமா வேண்டாமா என்பது பற்றி மக்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்தி, அதன் முடிவுப்படி செயல்படலாம் என்றும் ஒரு யோசனை முன்வைக்கப்பட்டது.
- வாக்கெடுப்பின் முடிவு என்னவாக இருந்தாலும் சத்தியாகிரகிகள் அதற்குக் கட்டுப்படுவார்கள். ஆனால், வைதிகர் அந்த வாக்கெடுப்பின் முடிவுக்குக் கட்டுப்பட வேண்டும் என்பது தேவையல்ல என்ற காந்தி அதிரடியாகக் கூறினார்.
- மக்கள் கருத்தை இதன் தொடர்பில் ஏற்படுத்திவிட வேண்டும் என்பது காந்தியின் நோக்கம். அப்படி உருவாகிவிட்ட மக்கள் கருத்துக்கு எதிராக வைதிகர்களால் நிற்க முடியாது.
- மக்கள் கருத்தின் வலிமையை வாக்குரிமை வருவதற்கு முன்பே காந்தி உணர்ந்திருந்தார் என்பதை இதிலிருந்து புரிந்துகொள்ளலாம்.

**கருத்து உருவாக்கம்:**

- அதேபோல "கோயில் தெரு நுழைவு உரிமையைச் சிவில் கோர்ட்டில் வழக்குத் தொடுத்து பெற்றுக் கொள்ளலாம்.
- எதற்கு அனாவசியமாகச் சத்தியாகிரகம் நடத்த வேண்டும் என்று ஒரு கட்டத்தில் திருவாங்கூர் அரசு சட்ட சபையிலேயே தெரிவித்தது.

- காந்தி அது பற்றி இப்படிக் கூறினார்: எதிர்காலத்தில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துத்தான் தீண்டாதவர்கள் என்று அழைக்கப்படுபவர்கள் அந்தக் கோயிலைச் சுற்றியுள்ள சாலைகளில் தடுக்கப்படும் உரிமை அல்லது வழக்கம் என்ற விஷயத்தைத் தீர்க்க வேண்டும் எனில், அது திருவாங்கூர் சாதாரண குற்றவியல் சட்டத்தின்படி விசாரிக்க வேண்டி வரும். ஆனால், அதற்கு முன் அரசாங்கத்தின் உதவியுடன் பொதுமக்கள் அபிப்பிராயத்தை உருவாக்கி விடலாம் என்று நான் நம்பிக்கொண்டிருக்கிறேன். அதன்மூலம் அது தடுக்கப்பட முடியாததாக ஆகிவிடும்".

- ஆக நீதிமன்றத்துக்கு வழக்கு போவதற்கு முன்பே மக்கள் கருத்தைச் சாதகமாக உருவாக்கிவிடுவது பாதுகாப்பானது என்பது காந்தியின் எண்ணம்.

- மக்களின் கருத்தைச் சாதகமாக மாற்றுவதில் பிரச்சாரம் மிக முக்கியமானது.

- பொதுமக்கள் கருத்து என்பது வெடி மருந்து போன்றது என்ற காந்தியின் வெளிப்பாடு புகழ்பெற்றது. அதை வைக்கம் சத்தியாகிரகத்தின் போதுதான் காந்தி சொன்னார். மக்கள் தம் வலிமையை உணர்ந்து செயல்பட வேண்டிய முக்கியமான தருணம் தேர்தல் காலம்.

## கடற்படை கப்பல் பழுதுபார்ப்பில் உலக அரங்கில் கவனம் ஈர்க்கும் இந்தியா

- மேற்குலக நாடுகள் தங்கள் கடற்படை கப்பல்களை பராமரிக்வும் பழுதுபார்க்கவும் இந்தியாவை நாட ஆரம்பித்துள்ளன.

**முக்கிய ஒப்பந்தம்**

- 2023-ம் ஆண்டு அமெரிக்காவுக்கும் எல் அண்ட் டி நிறுவனத்துக்கும் இடையே மாஸ்டர் ஷிப்யார்ட் பழுதுபார்ப்பு ஒப்பந்தம் (எம்எஸ்ஆர்ஏ) கையெழுத்தானது.

- அதேபோல், பிரிட்டனுடனும் 2022-ல் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

**ஏன் இந்தியா?**

- இந்தோ-பசிபிக் கடல் பகுதிகளில் கடற்கொள்ளை, ஏவுகணை தாக்குதல், ட்ரோன் தாக்குதல் உள்ளிட்டவை தொடர்ச்சியாக நிகழ்ந்து வருகிற நிலையில், அமெரிக்க மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகள் இப்பகுதியில் கூடுதல் கப்பல்களை ரோந்து பணிக்கு கொண்டு வந்தபடி உள்ளன.

- இந்தக் கப்பல்களில் பழுது ஏற்பட்டால், சொந்த நாட்டுக்குச் சென்று பழுதுபார்ப்பது என்பது நேர விரயம் மட்டுமல்ல செலவு மிகுந்ததும் கூட, இதே பணியை இந்தியாவில் மேற்கொள்வது என்பது பல விதங்களில் வசதியானது. செலவும் குறைவு.

- இதனால், அந்நாடுகள் தங்கள் கப்பல்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு பணிக்கு இந்தியாவை தேர்ந்தெடுப்பதாகக் கூறப்படுகிறது.

- இதற்குப் பின்னால் அரசியல் காரணமும் உண்டு. வலிமையான கடற்படையைக் கொண்டிருக்கும் சீனா, தென் சீன கடல் பகுதியில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

- இதனால் சீனா மற்றும் ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்கா தனது கடற்படையையும் தொடர்ந்து வலுவாக வைத்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

**இந்தியாவுக்கு என்ன பலன் ?**

- மேற்குலக நாடுகள் தங்கள் கப்பல் பழுதுபார்ப்புக்கு இந்தியாவை தேர்வு செய்வது என்பது இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் முக்கிய நகர்வாகப் பார்க்கப்படுகிறது.

- தவிர, இது சர்வதேச கப்பல் கட்டுமானம் மற்றும் பழுதுபார்ப்பில் இந்தியாவின் திறனை உலகுக்குக் காட்டுகிறது. மேலும், ராணுவ ரீதியாக அமெரிக்கா மற்றும் பிரிட்டனுடனான உறவு மேம்படவும் இது வழிசெய்கிறது.

- எல்லைப் பிரச்சினை சார்ந்து, சீனா இந்தியாவுக்கு தொடர்ந்து அச்சுறுத்துலாக இருந்து வருகிறது. சீனாவை எதிர்கொள்ள இந்தியா தனது ராணுவக் கட்டமைப் பலப்படுத்தி வருகிறது. இந்தச் சூழலில், அமெரிக்கா மற்றும் பிரிட்டனின் கடற்படைக் கப்பல்கள் இங்கு வருவதென்பது இந்தியாவுக்கு கூடுதல் பலமாக அமையும் என்று கூறப்படுகிறது.